விழுப்புரம் தெற்கு மாவட்டம்

காணை தெற்கு, காணை வடக்கு - கோலியனூர் மேற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள காணை தெற்கு, காணை வடக்கு மற்றும் கோலியனூர் மேற்கு ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகள் மறுசீரமைக்கப்படுகிறது:

காணை வடக்கு ஒன்றியம்

காணை வடக்கு ஒன்றியத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரியலூர் திருக்கை மற்றும் கக்கனூர் ஆகிய இரண்டு ஊராட்சிகள் காணை தெற்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது. காணை வடக்கு ஒன்றியமானது மீதமுள்ள 14 ஊராட்சிகளுடன் தொடர்ந்து செயல்படும்.

கோலியனூர் மேற்கு ஒன்றியம்

கோலியனூர் மேற்கு ஒன்றியத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 7 **ஊராட்சிகள் தனி ஒன்றியமாக விழுப்புரம் தெற்கு மாவட்டத்திலேயே தொடர்ந்து** செயல்படும்.

அத்துடன், **கோலியனூர் மேற்கு ஒன்றியத்தில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 8 ஊராட்சிகள் கோலியனூர் மத்திய ஒன்றியமாக விழுப்புரம் மத்திய** மாவட்டத்தில் செயல்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 06.05.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தென்காசி தெற்கு மற்றும் தேனி தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
10.05.2025 சனிக்கிழமை	காலை 9.00 மணி	தென்காசி தெற்கு	கோல்டன் ஹால், 23, எல்.எஸ்.கட்டடம் (ஆனைமலை டொயோட்டாவுக்கு எதிரே), பிரதான சாலை, எல்.எஸ்.நகர், குத்துக்கல்வலசை.
11.05.2025 ஞாயிற்றுக்கிழமை	மாலை 4.00 மணி	தேனி தெற்கு	அழகர் திருமண மண்டபம், தேனி – மதுரை ரோடு, கொண்டம நாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 06-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

ரூ. 643.18 கோடி மதிப்பீட்டில் நடைபெறும்

22 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கும் பணி - அக்டோபருக்குள் முடிக்க வேண்டும்!

குறு - சிறு - நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆய்வு கூட்டத்தில் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் உத்தரவு!

சென்னை, மே 7-

ரூ. 643.18 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் 22 புதிய தொழிற்பேட்டைகள், ரூ.120.79 கோடி மதிப்பீட்டில் கிராமப்புற வேலைவாய்ப்பை உறுதிசெய்யும் குறுங்குழும திட்டங்களை வரும் அக்டோபர் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உத்தரவிட்டார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அறிவிப்புகள் குறித்து, அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில், நேற்று (6.5.2025) கிண்டியில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அமைச்சர், "59 ஆயிரத்து 584 தொழில்முனைவோர்களை உருவாக்கி, இந்திய அளவில் ஸ்டாட் அப் தர வரிசையில் முதலிடம், உணவு பதப்படுத்தும் குறுந்தொழில் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்கு முதல் பரிசும் பெற்று, MSME துறை பல முன்னோடித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவதற்கு, துறை செயலாளர், துறைத் தலைவர்கள், உயர் அலுவலர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிட்கோவைப் பொறுத்தவரை இதுவரை ரூ.364.93 கோடி மதிப்பில் 13 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளது. ரூ.643.18 கோடி மதிப்பில் 22 தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்பேட்டைகளில் முதல் கட்டப்பணிகளை வரும் அக்டோபர் மாதத்திற்குள் முடித்து திறப்பு விழாவிற்கு கொண்டுவர வேண்டும். தொழில் வணிகத்துறை மற்றும் சிட்கோவினால் செயல்படுத்தப்படும் குறுங்குழும திட்டம் கிராமப்புற வேலை வாய்ப்பை உறுதி செய்யும் திட்டமாகும். அதில் ரூ.44.14 கோடி மானியத்தில், ரூ. 54.08 கோடி திட்ட மதிப்பீட்டில் இதுவரை 11 குறுங்குழுமங்கள் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முந்திரி தொழில், அச்சுத் தொழில், புகைப்பட தொழில், அச்சு வார்ப்பு, கயிறு, உப்பு, உணவு என பல்வேறு தொழில் புரிவோர் பயனடைந்து வருகிறார்கள். அந்த வகையில் ரூ. 120.79 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் 22 குறுங்குழுமங்களுக்கான பணிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை கொண்டாடும் விதமாக தொடங்கப்பட்ட கலைஞர் கடன் உதவி திட்டத்தில் 30 நபர்களுக்கு தொழில் தொடங்க ரூ 4.47 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதனை மேலும் அதிகரிக்க வேண்டும். அதிக நபர்களுக்கு கடன் உதவி வழங்க வேண்டும். அதுபோல், கலைஞர் கைவினைத்திட்டத்திலும், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் எய்தி, திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்திட வேண்டும்.

MSME துறையால் செயல்படுத்தப்படும் 5 வகையான சுய வேலை வாய்ப்பு திட்டங்களில் நடப்பு ஆண்டு ரூ. 635.17 கோடி மதிப்பில் 34,250 நபர்களை தொழில்முனைவோர்களாக உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டு இறுதி வரை காத்திருக்காமல், 6 மாத காலத்திற்குள் இலக்கை அடைய வேண்டும். விண்ணப்பங்கள் மீது காலதாமதம் இன்றி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். விண்ணப்பங்கள் அதிகம் நிலுவையில் உள்ள மாவட்டங்களின் அலுவலர்கள் மீது துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்படும்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் படி இதுவரை ரூ. 25,748 கோடி மதிப்பில் 2,373 நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள நிறுவனங்களை தொடங்க மாவட்ட தொழில் மைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்." இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

ஆய்வுக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல் ஆனந்த், டான்சி தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தர்மேந்திர பிரதாப் யாதவ், சிட்கோ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கார்த்திக், தொழில் வணிக ஆணையர் நிர்மல்ராஜ், EDII இயக்குநர் அம்பலவாணன், மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

'தேசிய கல்விக் கொள்கை எனும் மதயானை' நூல் வெளியீடு!

தேசிய கல்விக் கொள்கையின் தீமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்வோம்!

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலைதளப் பதிவு!

சென்னை, மே 7-

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் வலைதளப்பதிவு வருமாறு:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நான் எழுதியுள்ள "தேசியக் கல்விக் கொள்கை எனும் மதயானை" நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழை வழங்கி வாழ்த்துகள் பெற்றோம்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய தேசியக் கல்விக் கொள்கையை நம்மீது திணிக்கும் முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. ஆசிரியப் பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பெரும் பாதகத்தை தேசியக் கல்விக் கொள்கை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் "எக்காரணத்தைக் கொண்டும் அதனை ஏற்க மாட்டோம்" என உறுதியோடு எதிர்த்து வருகிறார்.

இக்கல்விக் கொள்கையை முன்னிறுத்தி நமக்கான கல்வி நிதியைத் தர மறுப்பது போன்ற அராஜகப் போக்கை ஒன்றிய அரசுகையில் எடுத்துள்ளது.

இச்சூழலில் தேசியக் கல்விக் கொள்கை உருவாக்கத்தில் ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவாத அமைப்புகளின் பங்களிப்பு என்ன? இதனால் ஆசிரியர்களுக்கு என்ன பாதிப்பு? ஏழை எளிய மாணவர்களை கல்வியில் இருந்து இது வெளியேற்றும் என ஏன் சொல்கிறோம்? என்பன போன்ற பொதுமக்களின் பல்வேறு கேள்விகளுக்கு மக்களில் ஒருவராக இருந்து விளக்குவது நமது கடமையாகும்.

இதன் விளைவாக "தேசியக் கல்விக் கொள்கை எனும் மதயானை" நூலினை தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளேன்.

வரும் 17-ஆம் தேதி அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் முதலமைச்சர் அவர்கள் இந்நூலினை வெளியிட்டு விழாப் பேருரையாற்றுகிறார்.

நாடாளுமன்ற நிலைக் குழுத் (கல்வி) தலைவர் மத்திய பிரதேச முன்னாள் முதலமைச்சர் திக் விஜய் சிங் அவர்கள் நூலினைப் பெற்றுக்கொள்கிறார்.

உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி கோபால கவுடா, இஸ்ரோ மேனாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

தேசியக் கல்விக் கொள்கையின் தீமைகளை மக்களிடம் எடுத்துச் செல்வோம். இந்நூலை அன்பில் பதிப்பகம் சார்பாக பதிப்பிக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சைதை சாதிக் தலைமையில் - கழக அரசின் 5ஆம் ஆண்டு தொடக்க விழா!

சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் 1000 பேருக்கு அசைவ உணவு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, மே 7-

தமிழ்நாடு மக்கள் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில் எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி நாடே பார்த்து வியக்கும் வகையில் 4 ஆண்டுகளில் ஈடில்லா சாதனைகளை படைத்து நல்லாட்சி நடத்தி வரும் மக்களின் முதல்வர் நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்பு தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழினத் திற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்காகவும், ஆற்றிய சாதனைகள் 4 ஆண்டுகள் நிறைவு பெற்று 5ம் ஆண்டு தொடக்கத்தை மிக சிறப்பாக கொண்டாடும் வகையில் சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைபிரிவு சார்பில் மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமையில் இன்று (07.05.2025 புதன்கிழமை) பிற்பகல் 12.30 மணியளவில் மேற்கு சைதாப்பேட்டை, சாரதி நகர் பேருந்து நிலையம் அருகில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும் பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., சைதை மா.அன்பரசன், வட்டகழக செயலாளர்கள் சை.மு. சேகர், அட்கோகமலநாதன், மாவட்ட பிரதிநிதி டி.என்.சிவமணி, சிறுபான்மை அணி மாவட்ட துணை அமைப்பாளர் அ.தமீம்அன்சாரி ஆகியோர் முன்னிலையில் 1000 நபர்களுக்கு பிரியாணியை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரப்பாக்கம் க. கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா உள்ளிட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், ந.தமிழரசு, எம்.நகா, மாவட்ட அமைப்பாளர்கள் நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், பால்கார் ரவி, பொன்ஜெய்சிங், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் க. பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன்,

அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்மந்தம், ஆட்டோ தியாகு, கு. கார்த்திகேயன், மாவுமில் ஸ்ரீதர், கேபிள்காளி, தீ. ராஜ்குமார், த.மணி, கே. தாஸ், என்.தீனதயாளன், வெ.புருசோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், வெ.கிஷோர்குமார், ஆர். துரைராஜ், சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஆர்.ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், கவி. தமிழ்வேல், ஸ்டெல்லா மேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி,

பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் ஆர். எஸ்.ரமேஷ், ஜி.ஜே. மோஸஸ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில்மணி, ஆட்டோஜான், ஆர்.தனசேகரன், சார்ப்சரவணன், வைரவமூர்த்தி, இரா. பாபு, பி.டி.சி.குமார், பூ. பாஸ்கர், த.ஜெயராமன், எஸ்.கோகுல்குமார், மாரியப்பன், விவேக்செல்வம், ஆர்.துரைராஜ், ஜீவா பிரபாகரன் உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள், பாகப்பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வின் நிறைவாக பகுதி பிரதிநிதிகள் பி.எஸ்.பிரகாஷ், எஸ்.முகமது அலி, யமாகா ராஜேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இந்து சமய அறநிலையத் துறையில் பணியாளர் சேம நலநிதி மூலம்

ஓய்வூதியம் பெறுவோர்க்கு பொங்கல் கொடை - கருணைத் தொகை!

அனைத்து திருக்கோயில் ஓய்வுபெற்ற பென்சன்தாரர்கள் - அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை நேரில் சந்தித்து நன்றி!

சென்னை, மே 7 -

இந்து சமய அறநிலையத்துறையில் பணியாளர் சேம நல நிதி மூலம் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு பொங்கல் கொடை மற்றும் கருணைத் தொகை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அனைத்து திருக்கோயில் ஓய்வுபெற்ற EPF பென்சன்தாரர்கள் நல சங்கத்தினர் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபுவை நேற்று (06.05.2025) அனைத்து திருக்கோயில் ஓய்வுபெற்ற EPF பென்சன்தாரர்கள் நல சங்க நிர்வாகிகள் சந்தித்து இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்போது, EPF மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு பொங்கல் கருணைக்கொடை, துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் பணியாளர்களுக்கு இணையாக கருணைத் தொகை வழங்கப்படும் என அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தனர்.

2025-2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை கடந்த 17.04.2025 அன்று நடைபெற்றது. அப்போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் துறை சார்ந்த திருக்கோயில் திருப்பணிகள், அர்ச்சகர் மற்றும் பணியாளர் நலன் குறித்த 210 அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதில் "திருக்கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, பணியாளர் சேமநலநிதி நிறுவனம் (EPF) மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதல் முறையாக பொங்கல் கருணைக்கொடை ரூ.2000/- வழங்கப்படும்" என்றும், "திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, EPF ஓய்வூதியம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் தற்போது ரூ.900/- முதல் ரூ.2,190/- வரை மட்டுமே ஓய்வூதியமாக பெற்று வருகின்றனர். இவர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் பணியாளர்களுக்கு இணையாக கருணைத்தொகை (Ex-gratia) வழங்கப்படும்" என்றும் அறிவிக்கப்பட்டது.

சேமநலநிதி நிறுவனம் (EPF) மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதல்முறையாக பொங்கல் கருணைக்கொடை மற்றும் துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் பணியாளர்களுக்கு இணையாக கருணைத்தொகை (Ex-gratia) வழங்கப்படும் என அறிவித்தமைக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து அனைத்து திருக்கோயில் ஓய்வுபெற்ற EPF பென்சன்தாரர்கள் நல சங்கத்தின் மாநில தலைவர் சு.கருப்பையா, மாநில செயலாளர் கு.அரவணை செல்வன், மாநில பொருளாளர் ஜெ. கல்யாண சுந்தரபாண்டி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து தங்கள் அமைப்பின் சார்பில் நன்றி தெரிவித்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வேலஞ்சேரி கிராமத்தில் கேழ்வரகு அரவை இயந்திரத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு இயந்திரத்தை தொடங்கி வைத்தார் நிகழ்ச்சியில் திருத்தணி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் கே.ராஜேந்திரன், உள்ளிட்ட கூட்டுறவு விற்பனையாளர்கள், அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள்,கிளை கழகச் செயலாளர், ஒன்றிய பிரதிநிதி, பொதுமக்கள் உள்ளனர்.